**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 139/2022**

**வா.சா.2 – மீனாட்சி சுந்தரம்** 11.02.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

எனக்கு இந்த நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை. என்னை 6வது வாதி செல்வக்குமார் சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். தாவா சொத்தின் சர்வே எண் 134/3 ஆகும். 1ம் பிரதிவாதியும் வாதிகளும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்குள் பாகப்பிரிவினை நடந்த விபரம் எனக்கு தெரியாது. 6வது வாதி எனது உறவினர் இல்லை எனக்கு பழக்கமானவர். சீதாலெட்சுமி யார் என்று எனக்கு தெரியாது. போஸ்ட் மாஸ்டர் முருகேசன் எனது உடன்பிறந்த மூத்த சகோதரரா என்றால் இல்லை. எனது அண்ணன் பெயர் முருகேசன் எனது அண்ணன் மனைவி பெயர் சீதாலெட்சுமி என்பதை நான் வழக்கிற்காக மறைத்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அண்ணன் மனைவி சீதாலெட்சுமியும் அவரது சகோதரர் காத்தமுத்து இருவரும் சேர்ந்து திருப்புவனம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 1, 2 பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு எண்.11/2021 தாக்கல் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கு சீதாலெட்சுமிக்கு பாதகமாகவும் 1, 2 பிரதிவாதிகளுக்கு சாதகமாகவும் முடிந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த நிலுவையில் இருந்த போது நான் சீதாலெட்சுமி, காத்தமுத்துவுக்கு போலீஸ் விசாரணையில் கலந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு பாத்தியப்பட்ட மோட்டார் சர்வே எண் 134/2ல் உள்ளது. சர்வே எண் 134/2 எனது அப்பா பெயரில்

உள்ளது. எனது அப்பாவிற்கு நான், கணேசன், சண்முகம், திருவாசகம் ஆகியோர் வாரிசுகள் ஆவோம். சர்வே எண் 134/2ல் உள்ள மோட்டார் எங்கள் நான்கு பேருக்கும் பாத்தியம். மேற்படி மோட்டாரை நான் அனுபவம் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக நான் அனுபவம் செய்வதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகள் எனது நெருங்கிய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் வாதிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் தாவா சொத்தை வாதிகள் எந்தக்காலத்திலும் அனுபவம் செய்தது கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல.

**3, 4பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதி சப்பாணியாபிள்ளை எனது உறவினர் இல்லை. வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் 1, 2 பிரதிவாதிகள் இடையூறு செய்ததால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் 3, 4 பிரதிவாதிகள் யார் என்ன என்ற விபரம் எனக்கு தெரியாது. 3, 4 பிரதிவாதிகளை பொறுத்து என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது, தாவா சொத்து சம்மந்தமாக 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் இன்று வரை பத்திர பதிவு எதுவும் ஏற்படுத்தவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதிகள் எனது உறவினர்கள்என்பதால் அவர்களுக்கு ஆதரவாக

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை